1992 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்களையும், காய்கறிகளையும் பதப்படுத்துவதற்கு 1200-க்கும் அதிகமான தொழில் நிலையங்கள் நம் நாட்டில் உள்ளன. தமிழ் நாட்டில் மட்டும் பழங்களைப் பக்குவப்படுத்துவதற்கு 165-க்கும் அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. கூட்டுத் துறையில் ரூபாய் 15 கோடி மூலதனத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் டன் நிறுவனத் திறன் கொண்ட பழம், காய்கறிகளைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை தர்மபுரியில் பர்கூரில் அமைக்கும் பிரேரணை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் (டிக்கோ) உள்ளது. அதே சமயத்தில் பழங்களையும் காய்கறிகளையும் வீணாகாமல் தடுப்பதற்கு அவை அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் பழங்களையும் காய்கறிகளையும் பக்குவப்படுத்துவதற்கு நடுத்தர மற்றும் சிறு ரக தொழில்களை நிறுவுவதை ஊக்குவிக்கும்படி மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஊரில் அடுத்த ஆண்டாவது தொடங்கப்படுமா என்பதுதான் அவருடைய கேள்வி.

மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் : ஆகவே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு இதுபற்றி பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 33. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

38—

எளிய மக்களுக்குக் கடன் வழங்கும் சிறப்புத் திட்டம்.

* 5063 திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் எளிய மக்கள் பயன்பெறும் வகையில் கடன் வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை மாநகரில் பெண்களுக்கென்று கடன் வழங்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள பெண்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி பெறும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், சென்னை மாநகரில் மட்டும் இதற்கான திட்டம் உள்ளது என்று சொன்னார்கள். இது மாநிலம் முழுவதும் விரிவு படுத்தப்படுமா ? எங்கெல்லாம் படித்துவிட்டு பெண்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் விதத்தில் இது விரிவு படுத்தப்பட்டு, எல்லா பகுதிகளிலும் உள்ள பெண்கள், அதிலும் யார் எல்லாம் உதவி கேட்கிறார்களோ அவர்களுக்கு உதவும் வகையில், இந்தத் திட்டத்தின் கீழ் உதவி செய்வதற்கான, கடன் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, சென்னை மாநகரத்தைப் பற்றியது. ஆகவே சென்னை மாநகரத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சென்னை மாநகரத்தைப் பற்றி இருந்ததால், சென்னை மாநகரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழகம் முழுவதும் இந்தத் திட்டம் விரிவு படுத்தப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்களே அறிவித்திருக்கிறார்கள்.

1992 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு எதுவும் தனிப்பட்டமுறையில் செய்யப்படவில்லை. ஆனால் இதுவரை சில ஆயிரம் பேர் மட்டும் பயனடைந்த இந்தத் திட்டத்திற்குப் பதிலாக, ஒரு லட்சம் ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டமாக இதை முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். இதன் மூலமாக உடல் ஊனமுற்றவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் அதிக அளவில் பயன் பெறும் வண்ணம் இந்த ஆண்டு ரூ. 15 கோடியில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இத்திட்டம் இந்த ஆண்டு பிப்ரவரி இறுதியில் புரட்சித் தலைவி அவர்களின் கையால் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39. திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

39—

சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை

*4220 திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராசிபுரம் சக்தி நகரில் கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையக் கிளை ஏற்படுத்தும் உத்தேசம் எதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.